# சூழல் ஆரோக்கியம் பேணல்

# ஒரு சமூகக் கடமை

மனித ஆரோக்கியம் சூழல் ஆரோக்கியத்தில்தான் தங்கியுள்ளது. மனிதனது தீராத ஆசைகள், சூழல் மீதான அளவு கடந்த உபயோகம் என்பவற்றின் காரணமாக சூழலின் ஆரோக்கியம் சீர்குலைந்து வருகிறது. சூழல் ஆரோக்கியம் தொடர்பாக உலகில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், சர்வதேச அரசசார்பு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் என சர்வதேச மட்டத்திலாலான எத்தனையோ அமைப்புகள், தேசிய அளவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, மற்றும் தனியார் நிறுவனங்கள் போன்றவை இன்று பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

ஐ.நா. சபை ஆரம்பத்தில் எட்டு மிலேனியம் வளர்ச்சி இலக்குகளை அறிமுகம் செய்தது. அவற்றில் ஏழாவது இலக்காக 'சுற்றுச்சூழல் நிலைபேண் தன்மையினை உறுதி செய்தல்' என்பது அமைந்திருந்தது. பின் 2015 இல் 'நிலைபேண் வளர்ச்சி இலக்குகள் 17' என்ற எண்ணக்கருவாக தோற்றம் பெற்று, 2030 ஆம் ஆண்டுகளுக்குள் அடையப்பட வேண்டிய இலக்குகளாக இவை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் அநேகமான இலக்குகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் சூழல் ஆரோக்கியம், சூழல் முகாமைத்துவம், பசுமையான சூழலின் நிலைபேண் தன்மையினை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பன தொடர்பானவையாகும்.

மனித-சூழல் உறவு என்பது மனித சமூகங்கத்திற்கும் இயற்கைச் சூழலுக்கும் இடையிலான சிக்கலான மற்றும் ஆற்றல் மிக்க தொடர்புகளைக் குறிக்கிறது. மனித செயற்பாடுகள் சூழலை எவ்வாறு பாதிக்கின்றன, சூழல் மாற்றங்கள் மனித சமூகத்தை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் புரிந்து கொள்வதற்கு இது அடிப்படையான ஒன்றாகும்.

சூழல் சீர்கேடு மனிதனுடைய ஆரோக்கியத்தில் நேரடியாக செல்வாக்குச் செலுத்துவதனால், அதனைத் தவிர்க்க சிறந்த பசுமையான இயற்கையுடன் நேயமுள்ள



**பேராசிரியர் பரீனா றுசைக்**

புவியியற்துறை,

கொழும்பு பல்கலைக்கழகம்

மனிதர்களாக எம்மை நாம் மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. இவ்விடயத்தில் மனிதன் தவறியதன் காரணத்தினால்தான் புவி உஷ்ணமடைதல், ஓசோனில் துளையிடல், கடல்மட்ட உயர்வு, காலநிலை மாற்றச் சீர்கேடுகள், நீர் மாசுபாடு, வளி மாசுபாடு, அமில மழை, குடிநீர் பற்றாக்குறை என பலவிதமான சீர்கேடுகளுக்கு மனிதன் முகம்கொடுக்க வேண்டியதாயிற்று.

இஸ்லாத்தைப் பொறுத்தளவில், இந்த நிலைபேண் வளர்ச்சி என்பது ஒரு புதிய விடயமல்ல. அல்குர்ஆன், அல் ஹதீஸ் ஆகியவை சூழலில் காணப்படுகின்ற பசுமையான தாவரப் போர்வைகளின் பாதுகாப்பு, மரம் நடுகையின் முக்கியத்துவம், நீர்நிலைகளின் பாதுகாப்பு, தேக்கநீர், குட்டைநீர் மாசுபடாமல் பாதுகாக்கப்படல் என்பன தொடர்பாகக் கூறியுள்ளன.

சுருங்கக் கூறின், இயற்கைச் சூழல் என்பது இறைவன் எமக்களித்த அருட்கொடை, அதுவோர் அமானிதம். அதனை வீணாக்காமல் பாதுகாத்து, அடுத்த சந்ததிக்கு கையளிப்பது எமது சமய, சமூகக் கடமையாகும். ■